# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 25.07.2023 | supeedsam.com | supeedsam@gmail.com


## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு நீதி கோரி

# வட, கிழக்கில் பூரண ஹர்த்தால்!

கொக்குத்தொடுவாய் மனித புதை குழிக்கு நீதி கோரி வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் வெள்ளிக் கிழமை பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் இந்த அழைப்பினை விடுத் துள்ளது.

அன்றைய தினம் வட்டுவாகல் பாலத்தில் ஆரம்பித்து முல்லைத் தீவு மாவட்ட செயலகத்தை நோக்கி பேரணியொன்றும் மேற்கொள்ளப்ப டவுள்ளது.

குறித்த ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பினரும் அரசியல் கட்சிகளும் எவ் வித பேதமுமின்றி ஆதரவளிக்க வேண் டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

02 ஆம் பக்கத்தில்...

## பொலிஸ் அதிகாரத்தை இல்லாது செய்யும் வகையில்

# ௨௨ ஆவது திருத்தம்



அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட் டத்தில் உள்ள பொலிஸ் அதிகாரங்களை நீக்கும் 22ஆவது திருத்தச்சட்டத்தை அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள தாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவித்துரு ஹெல உறுமய கட்சியின்

02 ஆம் பக்கத்தில்...

# வேள்ளியன்றும் கவனயீர்ப்பு பேரணி

## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் அழைப்பு



(பாறுக் ஷிஹான்)

கொக்குத்தொடுவாய் மனித புதை குழிக்கு நீதி கோரி வடக்கு கிழக்கு தழுவிய ரீதியில் எதிர்வரும் வெள்ளிக் கிழமை (28) மாபெரும் கவனயீர்ப்பு பேரணி ஒன்றை மேற்கொள்ள வடக்கு கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்ட வர்களின் உறவுகள் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

# 13 குறித்து கலந்துரையாட நாளை

## அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு ஜனாதிபதி அழைப்பு

13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்து வது குறித்து கலந்துரையாடல் நடத்துவதற்காக நாளைமறுதினம் புதன்கிழமை அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்ர மசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியா வுக்கான உத்தியோகப்பூர்வ விஜயத்தை மேற் கொள்வதற்கு

02 ஆம் பக்கத்தில்...

## இந்தியா காலூன்றினால் வட- கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் இருந்து துண்டாடப்படும்

இந்தியா, இலங்கையில் காலூன்ற நாடாளுமன்றத்தில் பிரதிநிதிகளாக இருக்கும் எவரும் கை உயர்த்தக்கூடாது. அது நாட்டின் பாதுகாப்புக்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாகும். - இவ்வாறு ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்

02 ஆம் பக்கத்தில்...

# மீண்டுமொரு கறுப்பு ஜூலை வேண்டாம்

## தடுக்க இதுதான் ஒரே வழி

13 ஆவது திருத்தத்தில் உள்ள அதிகாரப் பகிர்வை வழங்க ‘பாராளுமன்றம் அனும திக்க வேண்டும்’ என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். தற்போதைய பாராளுமன்றத்துக்கு மக்களாணை கிடை யாது.இந்த ஜனாதிபதியும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல.எனவே மக்களாணை இல்லாதவர்கள் ‘பாராளு மன்றம் அனுமதிக்க வேண்டும்’

02 ஆம் பக்கத்தில்...

# கிழக்கில் கணக்காய்வு திணைக்களத்தின் செயற்பாடுகள் குறித்து திருப்தி இல்லை

## இம்ரான் எம்.பி விசனம்

(சில்மியா யூசுப்)

கிழக்கு மாகாணத்தில் கணக்காய்வு திணைக் களத்தின் செயற்பாடுகள் குறித்து திருப்திய டைய முடியாதுள்ளது என திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

வெளி மாகாணங்களுக்கு நியமனம் செய் யப்பட்டுள்ள கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கல்விக் கல்லூரி ஆசிரியர் குழுப் பிரதிநிதிகளு டனான சந்திப்பு நேற்று (24) திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்ற போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு அவர் இவ் வாறு தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...



# சமஷ்டியும் தனிநாடும் தமிழர்களின் கோரிக்கையல்ல!

தமிழ் மக்கள் நிம்மதியுடன்தான் வாழ விரும்புகின்றார்கள். அவர்கள் ஒற்றையாட்சி வேண்டும் என்றோ சமஷ்டி வேண்டும் என்றோ விடுதலைப் புலிகள் கோரிய தனிநாடு வேண்டும் என்றோ ஒருபோதும் கோரவில்லை. - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த் தன தெரிவித்தார்.

தமிழர்கள் ஒற்றையாட்சியைக் கோருகின்றார்களா? சமஷ்டியாட்சி யைக் கோருகின்றார்களா? தனி நாட் டைக் கோருகின்றார்களா? என்பதை அறியத் துணிவு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள் என நாடா ளுமன்ற உறுப்பினர்

02 ஆம் பக்கத்தில்...


“சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma 34598 | 25605: cicero





MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலைமைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# மட்டக்களப்பு கச்சேரிக்கு முன்பாக ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட 12 பண்ணையாளருக்கு எதிராக வழக்கு தாக்குதல்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் கடந்த மாச் மாதம் இடம்பெற்ற அபிவிருத்திகுழு கூட்டத்தின் போது கச்சேரிக்கு முன்பாக சட்டவிரோதமாக ஒன்று கூடி நுழைவாசலை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 12 கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்கள் எதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் நீதிமன்றில் ஆஜராகிய 4 பேரையும் சொந்த பிணையில் செல்ல அனுமதித்து எதிர்வரும் நவம்பர் 27 ம்திகதி ஆஜராகுமாறும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் நேற்று திங்கட்கிழமை (24) உத்தரவிட்டார்

கடந்த மாச் 30 ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற இருந்த மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தின் போது அங்கு மயிலதமடு, மாதவனைகால் நடைவளர்ப்பு பண்ணையாளர்கள் தமது மேச்சல் தரை காணிகளை தனியார் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட செயலகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் நா.உறுப்பினர் இரா.சாணக்கின் கலந்து கொண்டு மாவட்ட செயலகத்திற்கு எவரும் உள்நுழையவே வெளிச் செல்லவே விடாது வாசலில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 12 பேருக்கு எதிராக மட்டக்களப்பு தலைமையக பொலிசார்சட்டவிரோத ஒன்றுகூடல் மற்றும் மாவட்ட செயலக வாசலை வழிமறித்து அமைதிக்கு பங்கம் விளைவித்த குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டு அவர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில்; பொலிசார் வழக்கு தாக்குதல் செய்து அவர்களுக்கான நீதிமன்ற கட்டளையை வழங்கினர்

இதனையடுத்து குறித்த வழக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் நீதவான் பீற்றர் போல் இன்று திங்கட்கிழமை (24) விசாரணைக்காக எடுக்கப்பட்டபோது இந்த வழக்கில் ஆணீராகிய 4 பண்ணையாளர்களையும்; சொந்த பிணையில் செல்லுமாறும் பொலிசாருக்கு வாக்குமூலத்தை வழங்குமாறும் எதிர்வரும் நவம்பர் 27 ம் திகதி வழக்கு விசாரணைக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டு பிணையில் விடுவித்தார்.

இதேவேளை இது தொடர்பாக கருத்து தெரிவித்த பண்ணையாளர்கள் எந்தவிதமான ஆர்ப்பாடத்திலும் ஈடுபடாமல் அடிமையாக இருக்க வேண்;டும் அரசும் பொலிசாரும் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தால் இப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் என இந்த வழக்கின் மூலம் பலப்படுகின்றது என்றனர்.

## பொலிஸ் அதிகாரத்தை இல்லாது செய்யும்...

தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஏற்படுத்திக்கொண்டுள்ள இணக்கப்பாட்டின் பிரகாரம் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் உறுதிமொழியை வழங்கியுள்ளார். ஜனாதிபதியுடனான சந்திப்பில் பொலிஸ் அதிகாரத்தை பின்னரும் ஏனைய அதிகாரங்களை நடைமுறைப்படுத்தவும் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அறிவித்திருந்தார்.

அதற்காக சர்வக்கட்சி கூட்டமொன்றுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். ரணில் விக்ரமசிங்கவுக்கு அதிகாரம் கிடைத்திருந்த அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதுடன், அது இருள் சூழ்ந்த யுகத்துக்கே தள்ளப்பட்டிருந்தது.

அதன் காரணமாக 13ஆவது திருத்தச்சட்டத்தில் பொலிஸ் அதிகாரத்தை நீக்கும் 22ஆவது திருத்தச்சட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைக்க உள்ளோம். இந்த திருத்தச்சட்டமூலமானது ஜனாதிபதி சட்டத்தரணிகள் அடங்கிய குழாம் எமக்கு செய்துத்தந்துள்ளது.

அடுத்தவாரம் இந்தத் திருத்தச்சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் - என்றார்.

## கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு...

குறித்த தினம் விடுமுறை என்பதால் வர்த்தகர்கள், விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், பல்கலைக்கழக மாணவர்களும் ஆதரவை வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளனர்.

## சமஷ்டியும் தனிநாடும் தமிழர்களின்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் சவால் விடுத்திருந்தார். இது தொடர்பில் பிரதமர் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சமஷ்டிக் கோரிக்கையையும் தனி நாட்டுக் கோரிக்கையையும் விடுதலைப்புலிகளும் தமிழ் அரசியல்வாதிகளும்தான் கோரி வந்தனர். ஒரு பக்கத்தில் தமிழ் அரசியல்வாதிகள் சமஷ்டி வேண்டும் என்று கோர மறுபக்கத்தில் விடுதலைப்புலிகள் தனி நாடு வேண்டும் என்று கோரினார்கள். இறுதியில் ஒன்றும் நடக்கவில்லை. இந்த ஒற்றையாட்சி நாட்டுக்குள்தான் மூவின மக்களும் இன்று வாழ்கின்றார்கள். - என்றார்.

## 13 குறித்து கலந்துரையாட நாளை

முன் வடக்கின் தமிழ் கட்சிகளுடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியிருந்தார்.

இதன்போது பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து ஏனைய 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள ஏனைய அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது குறித்த தமது முன்மொழிவை அவர் வழங்கியிருந்தார்.

என்றாலும், ஜனாதிபதியின் கருத்துகளை ஏற்றுக்கொள்ள முடியாதென கூறிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், கருத்தை நிராகரிப்பதாகவும் கூறினார்.

இந்நிலையில், ஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் போது 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தி இலங்கையில் தமிழ் மக்களை மரியாதையாக வாழ வைப்பதற்கான முயற்சிகளை ரணில் விக்ரமசிங்க எடுப்பாரென நம்புவதாக பிரதமர் மோடி தெரிவித்திருந்தார். அதேபோன்று நாடு திரும்பியதும் அதிகாரப் பகிர்வு குறித்து தமிழ் கட்சிகளுடன் விரிவான கலந்துரையாடலை நடத்துவதாக ஜனாதிபதியும் கூறியிருந்தார்.

இவ்வாறான பின்புலத்திலேயே நாளை மறுதினம் அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இக்கூட்டத்தில் வடக்கின் தமிழ் கட்சிகள், மலையக கட்சிகள் உட்பட நாட்டின் ஏனைய பிரதான கட்சிகளும் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெள்ளியன்றும் கவனயீர்ப்பு பேரணி

அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் நேற்று திங்கட்கிழமை (24) மாலை இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் போராட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் வட்டுவாகல் பாலத்தில் ஆரம்பித்து முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தை நோக்கி பேரணியொன்றும் மேற்கொள்ளப்படவுள்ளது.

குறித்த ஹர்த்தாலுக்கு அனைத்து தரப்பினரும் அரசியல் கட்சிகளும் எவ்வித பேதமுமின்றி ஆதரவளிக்கவேண்டும் என்பதுடன் அன்றையதினம் விடுமுறை என்பதால் வர்த்தகர்கள்இ விவசாயிகள்இ கடற்றொழிலாளர்கள்இ பல்கலைக்கழக மாணவர்கள் என அனைத்து தரப்பினரும் ஆதரவளிப்பதுடன் முல்லைத்தீவில் நடைபெறவுள்ள போராட்டத்திலும் பங்கேற்கவேண்டும் என அழைப்பு விடுத்துள்ளனர்.

குறித்த செய்தியாளர் சந்திப்பில் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி தம்பிராசா செல்வராணி திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி செபஸ்த்தியான் தேவியும் கலந்து கொண்டிருந்தார்.

# அரச சார் பாராளுமன்ற உறுப்பினர்களின் காணிக் கொள்ளைகள் அம்பலம்



நேற்று செங்கலடி பிரதேசசெயலகத்தில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட புளூட்டுமான் ஓடையில் காணப்படும் அரச காணியின் பல ஏக்கர் நிலங்களை ஒரு சில நபர்கள் உயிரோடு இல்லாத மற்றும் வாக்காளர் அட்டையில் பெயர் இல்லாத நபர்களது பெயர்களைப் பயன்படுத்தி அந் நிலங்களை உரிமையாக்கி; அங்கு காடழிப்பு செய்து நிலம் சீர் செய்யப்பட்டு எல்லைகள் இடும் நடவடிக்கைகளில் கடந்த சில வாரங்களாக ஈடுபட்டு வருகின்றனர். இச் செயற்பாடானது அப் பிரதேச செயலாளர், அந்த இடத்திற்கு பொறுப்பான கிராம அலுவலர், வன இலாகா அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு தெரியவில்லை எனக் கூறப்பட்டதை இன்றைய தினம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் குறித்த அதிகாரிகள் முன்னிலையில் திரையிட்டு காட்ட வேண்டிய துர்ப்பாக்கிய சம்பவம் இடம்பெற்றது. மேலும் அவர் இவ்வாறான சட்டவிரோத காணிக் கொள்ளைகள் அரச அதிகாரிகளின் ஆதரவுடன்; அரச பாராளுமன்ற அமைச்சர்கள் தங்கள் பினாமிகளின் பெயரில் கையகப்படுத்துவது தொடர்ந்த வண்ணமுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

புளூட்டுமான் ஓடையில் சட்டவிரோதமான முறையில் காணி பகிர்ந்தளிப்பு சம்பந்தமாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனினால் வழங்கப்பட்ட எழுத்து மூலமான கடிதம் 10.04.2023 அன்று அனைத்து தரப்பினருக்கும் அனுப்பி வைக்கப்பட்ட போதும்; ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் அவர்களுக்கு மாத்திரம் இன்று வரை கடிதம் கிடைக்கவில்லை என தெரிவித்தார். இன்றைய கூட்டத்திலும் இது தொடர்பில் ஆராயப்பட்டது. இவ்வாறான காணிக்கொள்ளைகளை தடுக்க மக்கள் முன்வர வேண்டும். மக்களுக்கு உரிய முறையில் எதிர்காலத்தில் சென்றடைய வேண்டிய காணிகளே இவ்வாறு கொள்ளையிடப்படுகின்றது.

# திருக்கோவில் ஆடிஅமாவாசை உற்சவம் ஒருங்கிணைப்பு கூட்டம்





( வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவம் தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம் நேற்று திங்கட்கிழமை திருக்கோவில் பிரதேச செயலாளர் ரி.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் திணைக்கள தலைவர்கள் அதிகாரிகள் கலந்து கொண்டனர். திருக்கொடியேற்ற நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் தேதி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக்குருக்கள் முன்னிலையில், ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் தலைமையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஆலய பரிபாலன சபை தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

இந்த உற்சவம் 17 நாட்கள் நடைபெற்று ஆகஸ்ட் மாதம் 16 ஆம் தேதி ஆடிஅமாவாசை தீர்த்த உற்சவத்துடன் நிறைவடைய இருக்கின்றது.

## மீண்டுமொரு கறுப்பு ஜுலை வேண்டாம்

என்று கூறுவது மீண்டும் கறுப்பு ஜுலையையே தோற்றுவிக்கும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

'மீண்டுமொரு கறுப்பு ஜுலை வேண்டாம்' என்ற தொனிப்பொருளில் ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான மக்கள் இயக்கம் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் உள்ள கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் இடம்பெற்ற போதே அதி பங்கேற்று இவ்வாறு தெரிவித்த சுமந்திரன் எம்.பி மேலும் கூறுகையில்,

கறுப்பு ஜுலை சம்பவம் மீண்டும் நிகழக் கூடாது என்றால் அரசியல் உரிமை,அதிகார பகிர்வு நிறைவான வகையில் அர்த்தமுள்ள முறையில் அமுல்படுத்த வேண்டியது அவசியம்.

இலங்கையில் கறுப்பு ஜுலை இனக்கலவரம் இடம்பெற்று 40 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் மீண்டும் அவ்வாறான ஒரு சூழல் தோற்றம் பெறாமல் இருப்பதற்கு உறுதியான நிலைபேறான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. இது தொடர்பில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்ற போதும் நிலையான நல்லிணக்கத்தை ஸ்தாபிக்க நடைமுறைக்கு சாத்தியமான எதுவுமே நடைமுறைப் படுத்தப்படவில்லை. இலங்கையில் 1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்ட பின்னர் இந்தியாவின் தலையீட்டுடன் 1987 ஆம் ஆண்டு 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஊடாக மாகாண சபை முறைமை உருவாக்கப்பட்டது.

தற்போதைய நிலையில் அது கூட முழுமையாக இல்லாதொழிக்கப்படுள்ளது.

13 ஆவது அரசியலமைப்பில்உறுதிப்படுத்தப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வை அமுல்படுத்துமாறு வலியுறுத்தும் போது அதற்கு பாராளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்த வேண்டுமானால் அதனை பாராளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என்று கூறுவது முறையற்றது. அதிகார பகிர்வுக்கு பாராளுமன்றத்திலுள்ள பெரும்பான்மை இடமளிக்காது என்பதை அறிந்தும்,பாராளுமன்றம் அனுமதிக்க வேண்டும் என ஜனாதிபதி கூறுகின்றார்.

நாட்டில் 2022 ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தின் விளைவாக தற்போதைய பாராளுமன்றத்துக்கு மக்களாணை இல்லை அது போலியான பெரும்பான்மையையே கொண்டுள்ளது.தற்போதைய ஜனாதிபதியும் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் அல்ல.எனவே தமிழ்மக்களுக்கான அதிகாரப் பகிர்வு வழங்க 'பாராளுமன்றம் அனுமதிக்க வேண்டும் 'என மக்களாணை இல்லாதவர்கள் கூறுவது மீண்டும் கறுப்பு ஜுலையையே தோற்றுவிக்கும்.

எனவே கறுப்பு ஜுலை சம்பவம் மீண்டும் நிகழக் கூடாது என்றால் அரசியல் உரிமை,அதிகார பகிர்வு நிறைவான வகையில் அர்த்தமுள்ள முறையில் அமுல்படுத்த வேண்டியது அவசியம் என்றார்.

## கிழக்கில் கணக்காய்வு திணைக்களத்தின்

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தில் சில பாடங்களுக்கு மேலதிக ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் எனக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு கொடுத்த தகவல்களின் அடிப்படையிலேயே கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்கள் வெளி மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தத் தகவலை என்னால் ஏற்றுக் கொள்ள முடியர்துள்ளது. உதாரணத்திற்கு கிழக்கு மாகாணத்தில் தமிழ் மொழி மூல விஞ்ஞானப் பாடத்திற்கு 30 ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் 52 தமிழ் மொழி மூல விஞ்ஞான ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை உள்ளது எனவும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்

கிழக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளதைப் போல 30 விஞ்ஞான ஆசிரியர்கள் மேலதிகம் என்றால் அவர்கள் எங்கே இருக்கின்றார்கள்? என்ன செய்கின்றார்கள் என்ற கேள்வி உள்ளது. இதனைத் தவிர திருகோணமலை மாவட்டத்தில் 52 வெற்றிடம் இருக்கின்றதென்றால் இந்த 52 பேரும் வேறு எங்கோ பொறுப்புகள் இல்லாமல் இருக்கின்றார்கள் என்று தானே அர்த்தம் என சுட்டிக்காட்டினார்.

கிழக்கு மாகாணத்தில் மத்திய கணக்காய்வு உத்தியோகத்தர்கள். மாகாண கணக்காய்வு உத்தியோகத்தர்கள் என இரு வகுதியினர் உள்ள போதிலும் இது போன்ற விடயங்களை இவர்கள் ஏன் கண்டு கொள்ளவில்லை.

இவர்கள் இவை தொடர்பாக பரிசீலனை செய்து உரிய காலத்தில் தேவையான அறிக்கைகளை தேவையான இடங்களுக்கு இட்டிருந்தால் மாகாணத்தில் 30 பேர் மேலதிகமாக இருந்தும் திருகோணமலை மாவட்டத்தில் 52 வெற்றிடம் இருக்க வாய்ப்பில்லை. இது போலவே ஏனைய பாடங்களுக்கான நிலையும் உள்ளது.

மேலதிக ஆளணியினரை வைத்திருப்போர் அவை தொடர்பான நட்டங்களை பொறுப்பேற்க வேண்டும் என்று ஏற்பாடுகள் உள்ள போதிலும் கிழக்கு மாகாண கணக்காய்வு திணைக்கள அதிகாரிகளின் பலவீனம் காரணமாக நீண்ட காலமாக ஆசிரியர் வளம் வீணடிக்கப்பட்டு வருகின்றது. சில பகுதிகளில் பற்றாக்குறையும் சில பகுதிகளில் மேலதிக மனித வளங்களும் என்ற நிலை உருவாகியுள்ளது.

எத்தனை வருடங்களாக இவ்வாறு இந்த மேலதிக ஆசிரியர் ஆளணி தேவையான இடங்களில் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்படுகின்றது என்பது குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் ஆசிரியர் வெற்றிடம் இருந்தும் கல்விக் கல்லூரி கற்கையை முடித்தவர்கள் திருகோணமலை மாவட்டத்திற்கு நியமனம் செய்யப்படாமைக்கு இது போன்ற பலவீன நிலைமைகளே காரணம்.

கணக்காய்வு அதிகாரிகள் சரியாக செயற்பட்டிருந்தால் உண்மையில் கிழக்கில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளார்களா என்ற தெளிவும் ஏற்பட்டிருக்கும். திருகோணமலை மாவட்ட ஆசிரியர்கள் திருகோணமலைக்கு நியமிக்கப்பட்டிருக்க வாய்ப்பும் ஏற்பட்டிருக்கும் என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியா காலூன்றினால் வட- கிழக்கு

நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின்போது இலங்கையையும் இந்தியாவையும் நில ரீதியாக இணைப்பது தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வுக்கு இணக்கம் காணப்பட்டது. இது தொடர்பில் சரத் வீரசேகர கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னாள் கடற்படைத் தளபதி என்ற ரீதியிலும் மக்களின் பிரதிநிதி என்ற ரீதியிலும் இந்தக் கருத்தை அரசிடம் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்தியா காலூன்றினால் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இலங்கையில் இருந்து துண்டாடப்படும். இதற்கு எந்தச் சந்தர்ப்பத்திலும் இடமளிக்கக் கூடாது. அது தேசிய பாதுகாப்புக்கு மிகவும் அச்சுறுத்தலானது. - என்றார்.

# திருமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு ஆளுனரால் வாழ்வாதார உதவிகள்



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் தலைமையில் திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச ஊடகவியலாளர்களுக்கான வாழ்வாதார உதவி கொடுப்பனவு வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் மாகாண ஆளுனர் தலைமையில் இடம் பெற்றன.

திருகோணமலையில் உள்ள ஆளுனர் செயலகத்தில் (22) மாலை இடம் பெற்ற குறித்த நிகழ்வில் தலா 50ஆயிரம் ரூபா என்றவாறு 30 ஊடகர்களுக்கு வழங்கப்பட்டன. ஊடகவியலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு இது வழங்கப்பட்டன.

இதில் மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவர் ஏ.பி.மதனவாசன் உட்பட பிரதேச ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஊடகவியலாளர்களுக்கு உதவ கிழக்கு ஆளுநர் விசேட திட்டம்



(ஏயெஸ் மௌலானா)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்களை வெள்ளிக்கிழமை (21) மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்து ஆளுநர் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் ஊடகவியலாளர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையை கௌரவித்து நிதியுதவி வழங்குவதற்கான ஆளுநரின் விசேட கருத்திட்டம் தொடர்பில் அவரால் விபரித்துக் கூறப்பட்டது.

மேலும், ஊடகவியலாளர்கள் கிழக்கு மாகாணத்தினுள் பஸ்களில் இலவசமாக பயணிப்பதற்கான பாஸ் வழங்குவதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அத்துடன் ஊடகவியலாளர்களுக்கு காணி வழங்குவதற்கான திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் ஊடக இல்லங்களை அமைப்பதற்கான சாத்தியங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

# அனைவரையும் கவர்ந்த வாழைச்சேனை அந்நூரின் நடைபவணி!













(எச்.எம்.எம்.பர்ஸான்)

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பழைய மாணவர் சங்கம் ஏற்பாடு செய்த நடைபவணி சனிக்கிழமை (22) இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர் ஏ.எம்.எம்.தாஹிர் தலைமையில் இடம்பெற்ற இவ் நடைபவணியில் 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை க.பொ.த சாதாரண தரம் வரை கல்வி கற்ற ஏராளமான பழைய மாணவர்கள் இந்த நடைபவணியில் கலந்து கொண்டனர்.

பாடசாலை மைதானத்தில் இருந்து வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ் நடைபவணி ஓட்டமாவடி மணிக்கூட்டுக் கோபுர வழியாக சென்று வாழைச்சேனை பொலிஸ் நிலையம், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை ஆகிய வீதிகளால் சென்று மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இடத்தில் வந்தடைந்தது.

பிரதேச மக்களை கவரும் வகையில் அலங்கரிக்கப்பட்ட வாகன பேரணியுடன இந்த நடைபவணி இடம்பெற்றது.

இதில், பாடசாலையில் ஓய்வு பெற்ற அதிபர்கள், பள்ளிவாசல் தலைவர்கள், சமூகமட்ட அமைப்புக்களின் தலைவர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

பாடசாலையின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு பழைய மாணவர்களை ஒன்றிணைத்து நடைபணி, கிரிக்கெட் சுற்றுத் தொடர் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் ஏ.எம். தாஹிர் தெரிவித்தார்.

# நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கிவைப்பு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் நீண்ட காலமாக காணி ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தலைமையில் (21) பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொதுமக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்களை வழங்கி வைத்தார்.

இதன்போது, பொதுமக்கள் அரசாங்கத்தால் வழங்கப்படும் காணி ஆவணங்களை எவ்வாறு கையாள வேண்டும் என்பது தொடர்பாகவும் பயனாளிகளுக்கு இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன், கணக்காளர் றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி திலகராணி கிருபைராசா, நிருவாக உத்தியோகத்தர் கே.யோகஸ்வரன், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எஸ் சிவம் உட்பட கிராம மட்டத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர் பற்று பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான வெறுப்புபேச்சு தொடர்பான விழிப்புணர்வு



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் அனுசரணையில் பிரண்டினா நிறுவனத்தின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலக ஏற்பாட்டில் ❛❛வெறுப்புப் பேச்சு❜❜ தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயலமர்வு கடந்த புதன்கிழமை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரமின் ஆலோசனையின் கீழ் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஏ. சுதாகரன் தலைமையில் இடம்பெற்ற இக்கருத்தரங்கில் வளவாளர்களாக ஜே. கணேசமூர்த்தி, ரி. ஜதீஷ்குமார், ஏ. சுதாகரன் ஆகியோர் செயற்பட்டனர்.

இதன்போது வெறுப்புப் பேச்சு என்றால் என்ன?, வெறுப்புப் பேச்சு என்ன வடிவங்களில் சமூகத்தில் வெளிப்படுத்தப் படுகின்றது, வெறுப்புப் பேச்சு சமூக ஊடகங்ளில் தொடர்பு படும் மற்றும் அதன் விளைவுகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பில் தெளிவு படுத்தப்பட்டது.

இச்செயலமர்வில் பிரதேச செயலகத்தின் சகல உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# காரைதீவின் முதல் பேண் சட்டத்தரணி டிறுக்ஷா உயர்நீதிமன்றத்தில் சத்தியப் பிரமாணம்!

( வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவைச் சேர்ந்த செல்வி தம்பிராஜா டிறுக்ஷா உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

இவர் காரைதீவு வரலாற்றில் முதல் பெண் சட்டத்தரணியாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் முன்னாள் நிதி உதவியாளர் கே.தம்பிராஜா மற்றும் விஷ்ணு வித்தியாலய அதிபர் திருமதி கலைவாணி தம்பிராஜா தம்பதிகளின் மகளான தம்பிராஜா டிறுக்ஷா உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சட்டமானி இளங்கலை, கொழும்பு பல்கலைக்கழக, சட்ட பீட பட்டதாரியாக (2ம் வகுப்பு உயர்மட்டம்) வெளியாகி , இலங்கை சட்டகல்லூரியில் இறுதி ஆண்டு பரீட்சையில் சித்தியடைந்து 2023.07.20ம் திகதியன்று சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

மேலும், இவர் சர்வதேச தொடர்புகள் பற்றிய டிப்ளோமா கற்கைநெறி, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் தொடர்பிலான தொலை தூர டிப்ளோமா கற்கை நெறி என்பனவற்றையும் பூர்த்தி செய்துள்ளார்.

இவர், காரைதீவு இ.கி.ச. பெண்கள் பாடசாலையில் பயின்று சா.தரத்தில் 9ஏ சித்திகளையும், விபுலாந்தா மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) பயின்று உயர்தரத்தில் 3 ஏ சித்திகளையும் பெற்று சட்டத்துறைக்கு தெரிவானார்.



# நல்லிணக்கத்திற்கான எதிர்காலம் திருமேலையில் கலந்துரையாடல்

(அ . அச்சுதன்)

இளைஞர்களும் நல்லிணக்கத்திற்கான எதிர்காலமும் என்ற தலைப்பில் அகம் நிறுவனத்தினால் சனிக்கிழமை (21) திருகோணமலையில் மும்மத பிரதிநிதிகளின் ஆசியுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

நிகழ்வில் இளைஞர்கள் ,சிவில் அமைப்பு பிரதிநிதிகள் ,பெண்கள்,இளைஞர்கள் என 70 பேர்வரை கலந்து கொண்டனர்.

திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய ஆணையாளர் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.



# அல்பிரட் துரையப்பாவை முதலாவது அரசியல் படுகோலை செய்த புலிகளின் தலைவர் பிரபாகரனே இறுதி அரசியல் படுகோலை என்பது துரவஸ்டம்

## நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன்

(கனகராசா சரவணன்)



புலிகளின் தலைவர் பிரபாகரனால் வடக்கு கிழக்கிலே முதலாவதாக சுட்டுக் கொல்லப்பட்ட அரசியல் படுகொலை யாழ் முன்னாள் மேஜர் அல்பிரட் துரையப்பா இறுதியான அரசியல் படுகொலை 2009 மே 18 பிரபாகரன் என்பது துரவஸ்டம் என மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தல் நேற்று சனிக்கிழமை ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஈரா. துரைரெட்ணம் தலைமையில் தியாகிகளை நினைவுகூருவோம் நினைவேந்தலில் கலந்துகொணட போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உண்மையில் இந்த தியாகிகளை நினைவு கூறுவரும் போது எனது மனதை உறுத்தும் ஒரு செய்தி நாங்கள் விடுதலைக்காக போராடியவர்கள் ஒற்றுமையாக செயற்பட்டிருந்தால் எமது இனம் 1983 காலத்துக்கு முன்னர் இருந்த காலத்துக்கு இன்று சென்றிருக்காது இன்று எங்களை நாங்கள் ஆளும் தனிநாட்டில் இருந்திருப்போம்.

இந்த நாட்டின் பூர்வீக குடிகளான தமிழ் மக்கள் இந்த நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து அடிமைகளாக இரண்டாம்தர ஒடுக்கப்பட்ட மக்களாக வாழ்ந்ததன் பிரகாரம் அந்த உரிமைக்காக அகிமிம்சை போராட்டத்தில் ஆரம்பித்து ஆயுத போராட்டத்திற்கு நாங்கள் வலிந்து தள்ளப்பட்டு 2009 மே 18 அந்த ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டது.

ஆயுத போராட்டம் ஆரம்பித்த காலத்தில் மிதவாத கட்சியான ஒரு கட்சி மக்களின் உரிமைக்காக போராடியது அந்த அகிம்சை போராட்டத்தில் நம்பிக்கை இழந்து அதில் வீறு கொண்டு எழுந்த இளைஞர்கள் விடுதலை போரட்டத்திற்கு உள்ளீர்கப்பட்டனர் வெளிநாடுகளில் படித்துக் கொண்டவர்கள் இணைந்தனர் அதில் ஒருவர் தான் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா. அவருடன் 13 பேர் உயிரிழந்தனர்.

இந்த நாட்டிலே 1983 ல் இடம்பெற்ற மிக மேசமான இனழிப்புக்கு பின்னர் விடுதலைப் போராட்டம் வீறு கொண்டு எழுந்தது பல போராட்ட இயக்கங்கள் விடுதலைவேண்டி ஆயுதம் ஏந்தி போராடினாலும் முன்னனியில் 5 இயக்கங்கள் போராடின அதில் 3 இயக்கங்கள் தேசிய முன்னணியாக ஒற்றுமையாக செயற்பட 1984 அடி எடுத்து வைத்த பின்னர் 1985 விடுதலை புலிகளும் முன்னணியில் இனைந்தனர்.

1983 இல் இருந்து 87 வரை உலகதமிழர் இடையே பேசும் பொருளாக இருக்கும் 13 வது திருத்த சட்டம் அதன் ஊடாக வந்த மாகாண முறைமை சட்டம் ஏற்படுத்தப்பட்டு இந்த 83 க்கும் 87 க்கும் இடைப்பட்ட காலப்பகுதில் ஒரோ ஒரு போராட்ட தலைவர்; தமிழ் ஈழு விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறிசபாரட்ணம் 1986 மே 6 ம் திகதி கொல்லப்பட்டதுடன் 1987 ம் யூலை 29 ம் திகதி இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலம் மாகாணசபை முறைமை வந்தது.

அந்த மாகாணசபையை நடாத்துமாறு தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இந்தியா வேண்டுகோள் விடுத்தது அதனை அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அந்த இடைக்கால நிர்வாக சபைக்கு 11 பேர் நியமிக்கப்படவேண்டிய தேவை இருந்தது அதில் 7 பேரை புலிகள் நியமித்தனர் ஏனைய 4 பேர் இலங்கை அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டனர்.

அதன்பின்னர் அதன் தலைமைத்துவம் யாருடன் செல்லவேண்டும் என்பதால் அது நிறைவேறாது சென்றது 1988 இறுதியல் மாகானசபை தேர்தல் அதில் கொல்லப்பட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் அமிர்தலிங்கத்திடம் மாகாணசபை முறையை ஏற்குமாறு கேட்டபோது அதனை அவர் மறுத்தார் அவ்வாறே அதனை ரெலோவும் எற்கவில்லை இந்த நிலையில் ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா எதிர்கால சிந்தனையுடன் இதனை ஏற்று கொண்டதையடுத்து இணைந்த வடகிழக்கு மாகாணசபை உருவாகியது.

விடுதலைப்புலிகள் கொல்லப்பட்ட முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தனர். அந்த காலகட்டத்தில் அண்ணன் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், மட்டக்களப்பில் நா.உறுப்பினராக இருந்த சாம்தம்பிமுத்து அவரது மனைவி உட்பட தமிழ் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பலர் கொல்லப்பட்டனர்.

அன்று 13 திருத்த சட்டத்தை ஏற்று இருந்தால் இன்று அது பேசும் பொருளாக இருந்திருக்காது. இந்த 1987 மாகாணசபை முறமை வந்தது தொடக்கம் 2009 மே 18 வரை ஜே.ஆர் ஜெயவத்தனாவின் கையை முறுக்கி பலாத்காரமாக அந்த ஒப்பந்தத்தில் கையொழுத்து இடவைத்த இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி உட்பட இந்த நாட்டிலே எத்தனை தலைவர்கள் கொல்லப்பட்டார்கள்

வடக்கு கிழக்கிலே முதலாவது அரசியல் படுகொலை முன்னாள் யாழ் நகர மேஜர் அல்பிரட் துரையப்பாவை சுட்டுக் கொன்றது புலிகளின்தலைவர் பிரபாகரன் அதை தூண்டியது அண்ணன் அமிர்தலிங்கம் அவர் யாழில் மேடை ஒன்றில் பேசும் போது அல்பிரட் துரையப்பாவிற்கு இயற்கை மரணம் கிடையாது என பேசியிருந்தார் அதை தொடர்ந்து தான் அல்பிரட் துரையப்பா கொல்லப்பட்டார். அல்பிரட் துரையப்பா முதலாவது அரசியல் படுகொலை ஆனால் நாட்டிலே இறுதியான அரசியல் படுகொலை 2009 மே 18 பிரபாகரன் என்பது துரவஷ;டம்

13 வது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கேட்கின்றோம் ஆனால் இறுதி தீர்வு மக்களுடைய அரசியல் அபிலாடிஷகள் 13 இல் உள்ளடக்கப்படவில்லை அது மேலும் செல்லவேண்டும் எங்களை நாங்களே ஆழக்கூடிய சுயநிர்ணய உரிமை வேண்டும் அதுதான் இறுதி இலக்கு ஆனால் 13 கிடைக்குமே என்பது சந்தேகம்.

இந்திய பிரதமர் நரோந்திர மோடியை சந்தித்த ஜனாதிபதி ரணிலுக்கு நல்ல குளுசை கொடுக்கப்பட்டுள்ளது கொடுக்க வேண்டிய கடமையம் தேவையும் இந்திய அரசுக்கு இருக்கின்றது காரணம் இந்த ஆயுதபோராட்டத்திற்கு தார்மீக ஆதரவும் அனுசரனையும் பயிற்சிகளையும் தந்தது இந்திய அரசாங்கம்.

அதேபோன்று 2009 ஆயத போராட்டத்தை மௌனிக்க வைப்பதற்கு இந்திய அரசு முக்கிய காரணம் இலங்கை இந்திய சர்வதேச ஒப்பந்தத்தில் இந்தியா கையொழுத்து இட்டுள்ளது அவர்களை நம்பிதான் நாங்கள் எல்லாம் ஆயுதங்களை ஒப்படைத்து இந்த நாட்டிலே அரசியல் கட்சியாக பதிவு செய்யப்பட்டுள்ளோம் எனவே இந்தியாவுக்கு கடமை இருக்கின்றது

கடந்த காலங்களில் இலங்கை அரசு வடகிழக்கல் மாத்திரமல்ல தெற்கில் 1971 ம் ஆண்டும் 1988 இரண்டு தடவை ஜே.வி.பி ஆயுத கிளர்ச்சியை சந்தித்தது அந்த கிளர்ச்சியை அடக்குவதற்கு இந்தியா உதவிகரம் நீட்டியதுடன் வடகிழக்கில் ஆயுத போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவர இந்தியா உதவிகரம் கொடுத்தது மாத்திரமல்ல தற்போதைய பொருளாதார ரீதியாக அதாள பாதாளத்துக்கு தள்ளப்பட்டபோது முதல் முதலாக உதவி கரம் நீட்டியது

சர்வதேச நாணய நிதியம் கூட இன்று 2.9 பில்லியன் கடன்களை நீண்டகால சலுகையில் கொடுக்க இருக்கின்றது ஆனால் இந்தியா ஒரு வருடத்துக்குள் 4 பில்லியன் டொலர்களை வழங்கியிருக்கின்றது அப்படிச் செய்த நாடு இந்தியா வடகிழக்கு தமிழர்களின் உரிமைகளை கொடுக்க வேண்டும் அவர்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என ஜனாதிபதி ரணில் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் இணைந்து ஊடக மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இந்த நாடு சுதந்திரமடைந்ததில் இரந்து பல இனவாதிகளை கண்டிருக்கின்றோம் சிறில் மத்தியு ஆர்.எம்.பி.ராஜரட்ண, ஆர்.எம்.சேனநாயக்கா போன்றவர்களை எல்லாம் ஒன்று திரட்டி ஒரு ஆளுக்குள் செலுத்தியதை போன்று இன்று சரத்வீரசேகர என்பவர் ஒரு இனவாதியாக தமிழின துரோகியாக கருத்துக்களை கூறிவருகின்றார்

எனவே நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் தமிழ் மக்கள் ஒற்றுமையாக ஒரே கருத்தை கூறாவிட்டால் அந்த ஒற்றுமையின் பலவீனத்தை அவர்கள் பயன்படுத்தி கொள்ள சந்தர்பத்தை வழங்கவேண்டாம் என்றார்.

# மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியில் உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தலும் உறவினர்களை கௌரவிப்பும்









(கனகராசா சரவணன்;)

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடியில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கட்சியினல் உயிரிழந்த தியாகிகளை நினைவுகூரும் நிகழ்வு முன்னாள் கிழக்குமாகாணசபை உறுப்பினரும் கட்சி உப தலைவருமான இரா. துரைரெட்ணம் தலைமையில் நேற்று சனிக்கிழமை (22) உயிரிழந்தவர்களின் உருவப்படத்திற்கு சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தி உறவினர்களை கௌரவித்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியில் இருந்து உயிரிழந்த படுகொலை செய்யப்பட்ட தோழர்களை வருடாவருடம் நினைவு கூர்ந்து அவர்களின்; உறவுகளை கௌரவிக்கும் 7வது நிகழ்வு களுவாஞ்சிக்குடி இராசமாணிக்கம் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது

இந்த நினைவேந்தலில் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாரன், முன்னாள் கிழக்கு மாகாணசபை உப தவிசாளர் பிரசன்னா இந்திரகுமார், இரா. துரைரெட்ணம், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சி மத்திய குழு உறப்பினர்கள் உட்பட கட்சி ஆதரவாளர்கள் உயிரிழந்தவர்களின் உறவுகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துகொண்டு படுகொலை செய்யப்பட்ட கட்சி தலைவர் பத்மநாபா மற்றும் களுவாஞ்சிகுடி, மண்டூர், காரைதீவு, கல்முனை, திருக்கோவில், அக்கரைப்பற்று, போன்ற வலயங்களில் உயிர் தியாகம் செய்த தியாகிகளின்உருவப்பத்திற்கு முன்னால் சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்து மல் தூவி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

இதனை தொடர்ந்து உயிர்தியாகம் செய்த தியாகிகளின் உறவினர்களுக்கு பொன்னாடை பேர்த்தி பொறிக்கப்பட் தியாகிகளின் திருவுருவ படங்களை வழங்கி கௌரவித்தனர்.

# மட்டு மேற்கு வலயமட்ட தமிழ் மொழித் தினப்போட்டி









மட்டக்களப்பு மேற்கு கல்வி வலய, தமிழ் மொழித்தின வலயமட்டப் போட்டியின் இறுதி நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை(21) குறிஞ்சாமுனை சக்தி வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் செ.மகேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்ச்சியில் கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், கிழக்கு பல்கலைக்கழக தமிழ் கற்கைகள் துறையின் தலைவர் பேராசிரியர் சி.சந்திரசேகரம், உதவிக்கல்விப் பணிப்பாளர் க. குணசேகரம் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன் போது தமிழ்மொழித் தினப்போட்டியில் முதல் இடத்தினைப் பெற்ற ஐந்து நிகழ்ச்சிகள் ஆற்றுகை செய்யப்பட்டன. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த வலயத்தின் கல்விப் பணிப்பாளராக இருந்து மாகாண கல்விப் பணிப்பாளராக உயர்வு பெற்று சென்ற செல்வி அகிலா கனகசூரியம் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து வாழ்த்துப்பா பாடி, மடல் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இதனை வலயத்திற்குட்பட்ட தமிழ் பாட ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர், உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆகியோர் இணைந்து இதனை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வலய தமிழ் மொழித்தினப் போட்டியில் மண்முனை மேற்கு கோட்டம் முதலிடத்தினையும், மண்முனை தென்மேற்கு கோட்டம் இரண்டாம் இடத்தினையும் ஏறாவூர் பற்று கோட்டம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டது.

# காத்தான்குடியில் ஒரு கிலோ 659 கிராம் கேரளா கஞ்சாவுடன் கஞ்சா வியாபாரி ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள வீடு ஒன்றை இன்று சனிக்கிழமை (22) முற்றுகையிட்ட பொலிசார் அங்கு ஒரு கிலோ 659 கிராம் கேரளா கஞ்சாவுடன் 55 வயதுடைய வியாபாரி ஒருவரை கைது செய்துள்ளதாக மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி டி.எஸ்.எஸ்.கே. தெலங்காவலகே ணதிவித்தார்.

மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றையடுத்து கிழக்கு பிராந்திய சிரேஸ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித்ரோகன வின் ஆலோசனைக்கமைய உதவி பொலிஸ் மா அதிபர் எம்.பி.லியனகே , சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எதிர்மன்ன, உதவி பொலிஸ் அத்தியட்சகர் கே.எம். ஏ.கே பண்டார ஆகியோரின் வழிகாட்டலில்.

மாவட்ட குற்றவிசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி டி.எஸ்.எஸ்.கே. தெலங்காவலகே தலைமையில் பி.எஸ்.டபிள்யூ.எம்.ஏ.வெளகெதர, எம்.ஜி. நிஷடந்த வி.அருள்குமார், ஏ.கே.ஐ.மிஹிரங்க, வி.ருஷந்தன், டபிள்யூ.ஜி.எல்.ஆர்.வத்தேகெதர, டி.எம்.ஆர்.பி. பண்டார, கே.தனுஷன் ஆகியோர் கொண்ட பொலிஸ் குழுவினர் சம்பவதினமான இன்று சனிக்கிழமை பிற்பகல் காத்தான்குடி கடற்கரை வீதியிலுள்ள குறித்த வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன் போது வியாபாரத்துக்காக கொண்டுவரப்பட்டு பதுக்கிவைத்திருந்த கிலோ 659 கிராம் கேரளா கஞ்சாவை மீட்டதுடன் 55 வயதுடைய ஒருவரை கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் நீண்டகாலமாக கஞ்சா வியாபாரர்ரில் ஈடுபட்டுவந்துள்ளார் எனவும் இவரை விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஸர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## எழுதத் தூண்டும் எண்ணங்கள் : 08

# எண்ணித் துணிக கருமம்

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்*
*எண்ணுவம் என்பதிழுக்கு திருக்குறள்.*

பிறந்தது முதல் முதியவராகி இறக்கும்வரை வாழ்க்கையில் பல கருமங்களை ஆற்றிக் கொண்டு இருக்கின்றனர். அவற்றுள் இச்சைவழிச் செயற்பாடுகள், சிந்தனை வழிச் செயற்பாடுகள் என இரண்டும் பிரதானமாவை. இச்செயற்பாடுகளில் பல நாளாந்தம் இயல்பாகவே நடந்து கொண்டிருக்கின்றன. எச்செயலாக இருந்தாலும் அவற்றைத் திட்டமிட்டு நடத்தும்போது வாம்க்கை அர்த்தமுள்ளதாக அமைகின்றது. பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்றில்லாமல் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் வாழும் வாழக்கை பெறுமதியானதாகவும், சரித்திரமானதாகவும் அமைய வேண்டும். அந்த வாழ்க்பையே நிலையான பெயரையும் புகழையும் பெற்றுத்தரும். இப்படியாக வாழுகின்ற வாழ்க்கையே அர்த்தமுள்ளதாகவும் இறந்த பின்னரும் பேசப்படும் பெருமையையும் பெற்றுத்தரும். வாழ்க்கையில் நாம் மேற்கொள்ளும் எந்தச் செயற்பாடாக இருந்தாலும் அதனைத் திட்டமிட்டுச் செயற்படுத்தப் பழகிக் கொள்வோமானால் நாம் தொட்டுத் தொடங்கிச் செயற்படுத்தும் போது எதிலும் வெற்றியை நமதாககிக் கொள்ளலாம்.

'பதறாத காரியம் சிதறாது' என்பார்கள். எந்தக் காரியத்தையும் நின்று, நிதானித்து, ஆத்திர அவசரமின்றிப் புத்தி சாதுரியம் விவேகத்துடன் திட்டமிட்டுச் செயற்படுத்திக் கொள்ள வேண்டும். கருமத்தைத் திட்டமிடும் போது அதனைச் செய்வதற்கு நமக்குள்ள பலம். பலவீனம், நமக்குக் கிடைக்கப்போகும் வாய்ப்புக்கள், அதனால் வரவிருக்கும் அச்சுறுத்தல்கள், சவால்கள், நெருக்கடிகள், பிற பிரச்சினைகள் ஆகியவற்றையும் முன்கூட்டியே தீர்மானித்துக் கொண்டு அதற்கேற்றவாறு திட்டத்தை வடிவமைத்துக் கொள்ள வேணடும். நம்மிடம் உள்ள வளங்களில் இருந்து உரிய இலக்கை அடையும் வகையில் வினைத்திறனுடன் உச்சப்பயன் பெறத்தக்கதாக முன்கூட்டடியே தீர்மானித்துக் கொள்ளலைத் திட்டமிடல் எனலாம். திட்டமிடும் போது நம்மிடம் இருக்கும் வழங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மனிதவளம், பொதிகவளம், நிதி, தொழினுட்பம், காலம் ஆகிய வளங்களைக் கவனத்தில் கொண்டு திட்டமிடல் வேண்டும். இவ்வளங்களில் குறைந்தபட்சம் 75 வீதமாவது நம்மிடம் இருத்தல் வேண்டும். நம்மிடம் இல்லாததைக் கொண்டு திட்டமிடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எப்போதும் இருப்பதிலேயே கவனம் செலுத்த வேண்டும். நம்மிடம் இல்லாததை வைத்துத் திட்டமிட்டுச் செயற்படுத்தினால் கருமத்தை இடையில் நிறுத்த வேணடிய சூழ்நிலையும் ஏற்படலாம். அதனால் நம்மிடம் இருக்கும் வளத்துக்கு முன்னுரிமை அளிப்பது அவசியமாகும்.

'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்து அறிவதே மெய்' ஆகும். நம் கண் முன்னே பல மாயத் தோற்றங்கள் வந்து உண்மையை மறைக்கலாம். பல தகவல்கள் காதை வந்தடையலாம். அப்போதெல்லாம் நாம் உண்மையை அறிந்து கொள்ள முயசிக்க வேண்டும். தீர விசாரித்தறிய வேண்டும். உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும். பிரச்சினைகள், சந்தேகங்கள் ஆகியவற்றைத் உடனுக்குடன் தீர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். அவற்றை வளரவிட்டால் காலப் போக்கில் பெருவிருட்சமாக வளர்ந்துவிடும். சிறந்த தீர்மானங்களை எடுத்துப் பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்துக் கொள்ள வேண்டும். சில விடயங்களை ஆறப் போட்டுத்தான் ஆக வேண்டும். அவை எதுவென்பதையும் நிதானமாகச் சிந்தித்துத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். எல்லாமும் எப்போதும் சரியாக அமையாது. அதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும். திட்டமிடும்போது நான் தருகிறேன். அவர் தருவார், இவர் தருவார், அங்கிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்றெல்லாம் கூறுவார்கள். அவ்வேளையில் அவதானமாக இருத்தல் வேண்டும். அவ்வாறு அதனை நம்பி முயற்சியை ஆரம்பிப்தாயின் நம்மிடம் ஒரு மாற்றுத் திட்டம் இருத்தல் வேண்டும். அவர்கள் செய்வதாகக் கூறிய உதவி தடைப்பட்டால் உடனடியாக வேலையை முன்னெடுப்பதற்கு தந்திரோபாயத் திட்டமிடலை மேற்கொள்ள வேண்டும். அவசரம் இல்லையெனில் நம்மிடம் இருக்கும் மாற்றுத் திட்டத்தைப் பயன்படுத்தி வேலையைத் தொடர வேண்டும். இதுவே சிறந்த திட்டமிடல் செயற்பாடாக அமையும்.

திட்டத்தைத் தீர்மானித்த பின் உசிதமான வேளையில் வேலையை ஆரம்பித்தல் வேண்டும். அதனை நிறைவேற்றி முடிப்பதில் ஆர்வம் காட்ட வேண்டுமே தவிர மீள்பரிசீலனை செய்வதிலோ திட்டத்தைப் பிற்போடுவதிலோ ஆர்வம் காட்டக் கூடாது. அவ்வாறு பின் நிற்பது திட்டத்தை ஆரம்பித்து நிறைவேற்றுவதைத் தாமதப்படுத்தலாம். திட்டத்தை ஆரப்பிக்கும் போதோ அல்லது செயற்படுத்தப்பட்டுக் கொணடிருக்கும் போதோ 'பல கைகள் நம்மைத் தள்ளிவிட முயற்சிக்கலாம். தள்ளியும் விடலாம். அத்தனை தடவையும் முயற்சியையும் நம்பிக்கையையும் தளரவிடாது, தாமாக எழுந்து பயணத்தைத் தொடர்ந்து இலக்கை அடைய வேண்டும்'. இதுவே வெற்றியாளனுக்குரிய இலட்சணமாகும். 'வெற்றியோ தோல்வியோ நம்பிக்கையையும் முயற்சியையும் தளரவிடாது தொடர்ந்து முயற்சி செய்து இலக்கை அடைபவனே சிறந்த சாதனையாளனாவான்'.

ஒரு சாதனையாளனுக்கு தன்னம்பிக்கையும் விடா முயற்சியும், பிரச்சினை தீர்க்கும் ஆற்றலும், தக்க வேளையில் தீர்மானமெடுக்கும் திறனும், செயற்பாட்டினைச் சீர்தூக்கிப் பார்க்கும் ஆற்றலும் மிக மிக அவசியமாகும். எப்போதும் எந்த வேளையிலும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நிதானமும் பொறுமையும் விடா முயற்சியும் நம்பிக்கையும் நல்ல பலனைப் பெற்றுத்தரும். எத்தகைய சந்தர்ப்பத்திலும் முயற்சியைக் கைவிடுவது பற்றியோ, பிற்போடுவது பற்றியோ சிந்திக்கக் கூடாது. அவ்வாறெனில் தற்போதைய சூழல், அதன்பாரதூரத் தன்மை, தற்போதைக்குத் தொடர்வதனால் பாரிய இழப்புக்களைச் சந்திக்க நேரலாம் என முழுதாக அறிந்த பின்னர் திட்டத்தைப் பிற்போடலாம். பிற்போட்ட பின்னர் சூழலை நன்கு அவதானித்துக் கொண்டிருத்தல் வேண்டும். இந்த நிலையில் நிதானத்தையும் பொறுமையையும் கடைப்பிடிக்க வேண்டும். நடைமுறைப்படுத்திய திட்டம் தொடர்பாக பலர் எதுவும் கூறலாம். இந்த வேளையில் நமபிக்கை இழக்காது, திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதில் முழுக் கவனத்தையும் செலுத்துதல் வேண்டும்.

சாதாரணமாக வீட்டில் நடக்கும் நிகழ்வுகளிலோ வேறு எங்காவது நடக்கும் நிகழ்வுகளிலோ திட்டமிடல் அவசியமானதாகும். திட்டமில்லாத செயற்பாடுகள் ஓரிரண்டைத் தவிர மற்றவை எல்லாம் தோல்வியிலே முடியும். 'செய்வன திருந்தச் செய்' என்ற






**சோலையூர்க் குருபரன்**

முது மொழியிலும் திட்டமிடல் அடங்கி இருக்கிறது. 'எதையும் யோசித்துச் செய்' 'முயற்சி செய்' 'சிந்தித்துச் செயலாற்று' என்பதில் எல்லாம் மறைமுகமாகத் திட்டமிடல் அடங்கி இருப்பதைக் காணலாம். நாம் பல விடயங்களில் திட்டமிடலை மறந்து செயலாற்றுவதனால் பல தோல்விகளைச் சந்தித்திருக்கிறோம். சிந்தித்துத் தீர்மானம் எடுக்காததனால் பல சந்தர்ப்பங்களில் நமக்குக் கிடைக்க வேண்டிய வெற்றி வாய்ப்புக்களை இழந்திருக்கிறோம். கற்றல் செயற்பாடுகள், பரீட்சைகள், தொழில் முயற்சிகள், பதவிகள், திருமண வாழ்க்கை, வாகனம் வாங்குதல், வீடு கட்டுதல் ஆகிய இன்னோரன்ன செயற்பாடுகள் யாவற்றிலும் பல சந்தர்ப்பங்களில் நமக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்புக்களை இழந்திருக்கிறோம். முயற்சிக்காமல் நல்ல வாய்ப்புக்களைக் கைநழுவ விட்ட பின்னர் அதனை நினைத்து வருந்துவது 'கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்தல்' என்பது போல் ஆகிவிடும்.

நமது வாழ்க்கையில் நமக்குக் கிடைக்கப் போகும் வாய்ப்புக்களைத் திட்டமிட்டுப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வாய்ப்புக்கள் நம்மை விட்டுச் சென்றால் மீண்டும் வருவதற்குக் காலமெடுக்கும். சிலவேளை கிடைக்காமலும் போகலாம். வாய்ப்புக்கள் கதவைத் தட்டும் போது பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நம்மை விட்டுச் சென்றபின் வருந்துவதனால் எந்தப் பயனுமில்லை. வாய்ப்புக்கள் எப்போதும் நமக்கு வெளியேதான் இருக்கும். அதனை அடைவதற்கு நாம்தான் முயற்சிக்க வேண்டும். சிலரின் அதிஸ்டம் காரணமாக வாய்ப்புக்கள் இலகுவாகக் கிடைத்து விடலாம் சிலருக்குப் பல முயற்சிகளின் பின்னர் கிடைக்கலாம். இன்னும் சிலருக்குப் பல தோல்விகள், கவலை, விரக்திகளின் பின்னர் கிடைக்கலாம். சிலருக்கு 'எட்டாக் கனியாகக்' கிடைக்காமலும் போகலாம். நம்பிக்கையோடு முயற்சி செய்பவன் விரைவில் இலக்கை அடைவான். முயற்சி இல்லாமல் கிடைப்பது எதுவும் பெறுமதி அற்றதாகவே கொள்ளப்படும். திருடன்கூடத் திட்டமிட்டுப் பலநாள் முயற்சி செய்தே திருடும் போது நாம் நல்ல விடயத்துக்காக ஏன் முயற்சிக்கக் கூடாது. 'முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும்'' முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்' என்கின்ற முதுமொழிகள் யாவும் முயற்சியையே வலியுறுத்தி நிற்கின்றன.

திருமண வாழ்க்கை என்பது 'ஆயிரம் காலத்துப் பயிர்' என்பார்கள். பல ஆண்டுகாலம் வாழ வேண்டிய வாழ்க்கையை ஆற, அமரச் சிந்தித்து, அவசரப்படாமல் பலரிடம் ஆலோசித்துத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். திருமணத்தினைச் சரியான நேரத்தில் சரியான தீர்மானமெடுத்து நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யப்படாத எத்தனையோ திருமணங்கள் விவாகரத்திலும், பிரிவிலும், தினசரி சண்டை சச்சரவிலும் நின்று கொண்டிருக்கின்றன. அமைதியான சந்தோசமான வாழ்க்கை பல குழப்பங்கள் போராட்டங்களுடன் முற்றுப் பெறுகின்றன. சிலர் கிடைத்த வாழ்க்கை இதுதான் எனக் கொண்ட மற்றவை எல்லாவற்றையும் மறந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இலங்கையின் திருமணச் சட்டத்தின்படியும் குலம், கொத்திர, சாதி, சமய சம்பிரதாயங்களின்படியும் திருமணத்தில் ஒரு தவறு நடந்துவிட்டால் அதனைத் திருத்திக் கொள்வதற்குப் பல காலம் காத்திருக்க வேண்டி வரும். சிலர் திருத்திக் கொள்ள முடியாமல் கவலையும் சோகமுமாக வாழ்ந்து மடிந்ததையும் கண்டிருக்கிறோம். திருமண பந்தம் சிலருக்கு மிகச் சிறப்பாக அமைவதுண்டு. இன்று 82 வீதமான குடும்பங்கள் பனிப்போர் நிலையில் வாழ்ந்து கொண்டிருப்பதாகச் சமூகவியல் ஆய்வொன்று கூறுகிறது. பட்டம், பதவி, சமூக அந்தஸ்த்து கௌரவம், சமூகப் பொறுப்பு, தான் பெற்றுள்ள மதிப்பு மரியாதை, குடும்ப கௌரவம், பிள்ளைகளின் எதிர்காலம் ஆகியன காரணமாகப் பல குடும்பங்கள் பிரியாது போலியான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருப்பதாகவும் அவ்வாய்வு குறிப்பிடுகின்றது.

கோபம், பிடிவாதம், புரிந்துணர்வு விட்டுக் கொடுப்பின்மை என்பவற்றால் பல குடும்பங்களின் திருமண வாழ்க்கை சிதைந்து கொண்டிருக்கின்றன. கணவன், மனைவி இருவரும் கோபம் வந்தால் என்ன பேசுகிறோம், எவ்வாறு பேசுகிறோம் என்று நினைத்துக்கூடப் பார்க்காமவ் பிள்ளைகளையும் வைதக் கொண்டு கெட்ட வார்த்தைகளால் பேசிப் பிள்ளைகளையும் பழக்கி விடுகின்றனர். நாள் பார்த்து, விசாரித்து நச்சத்திரம், பொருத்தம் பார்த்து, ஆலோசித்துக் கலந்துரையாடி, கேட்டுப் போய், பெட்டி கொண்டு போய்த் திருமணன் செய்யும் வரைக்கும் பிரச்சினை இல்லாதிருக்கும். திருமணம் செய்த பின்னர் குறைகளைக் கண்டு பிடிப்பார்கள். அதற்குப் பின்னர் பிரச்சினைகள் ஆரம்பமாகும். குடும்ப கௌரவம் பார்த்தல், தனது குடும்பத்தை விட்டுக் கொடுக்காமை, வந்தான் வரத்தாள் போல் பார்த்தல், வசை, வக்கணம் கூறல், எடுத்ததற்கெல்லாம் சந்தேகப்படல், உண்மையை விளங்கிக் கொள்ள முற்படாமை என்பவற்றால் பல குடும்பங்கள் தினமும் பிரச்சினைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இது கூடுதலாகக் கற்றோரிடம் நடந்து கொண்டிருப்பதைக் காண முடிகிறது. அமைதியாக இருந்து சிந்தித்துத் தமது குடும்பக் நமது கௌரவம், பிள்ளைகளின் எதிர்காலம், தமது எதிர்காலம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு செயற்பட்டிருந்தால் வாழ்க்கையைச் சீரமைத்துச் சந்தோசமாக்க வாழந்திருக்கலாம். இதை வீடுத்துக் கோபப்படுவதாலும், சந்தேகப்படுவதாலும் எதனையும் சாதிக்க முடியாது என்பதையும் விளங்கிக் கொள்ள வேண்டும். பிரச்சினை இல்லாமல் யாருமில்லை என்பதனால் அதனைப் பேசித் தீர்மானித்து சமாதானப்பட்டுக் கொள்வதே சிறந்ததாகும். முன்னைய கட்டுரையிலும்



பிறந்த திகதியின் முக்கியத்துவம் பற்றிக் கூறி இருந்தேன். பிறந்த திகதியை அடிப்படையாகக் கொண்டே அவரின் வாழ்க்கை தீர்மானிக்கப்பட்டிருக்கும். அந்தத் திகதியோடு இராசி, நச்சத்திரம், கிரக நிலை அவற்றின் சஞ்சாரம் ஆகியன அடங்கி இருக்கும். அதனால் அத் திகதிக்குப் பொருத்தமான ஒருவரையே வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒன்று முதல் ஒன்பது வரையான எண்களுக்குள் அடங்கும் ஒவ்வொரு திகதிக்கும் தனித்துவமான சக்தி உண்டு. அந்த சக்தியின் அடிப்படையிலேயே நமது வாக்கையும் வடிவமைக்கப்படடிருக்கும். இதிலிருந்து யாரும் தப்பிக் கொள்ள முடியாது. அந்த சக்தி ஒவ்வொரு கணத்திலும் நமது வாழ்க்கையை வடிவமைத்துக் கொண்டிருக்கும். அதன் அடிப்படையில் நமது திகதிக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணையைத் தேடிக்கொள்ள வேண்டும். அமைந்த வாழ்க்கைத் துணை பொருந்தாத எண்ணில் அமைந்திருந்தால் வாழ்க்கை முழுவதும் துன்பமாகவும், சண்டை, சச்சரவுகள் நிறைந்ததாகவும் அமைந்துவிடும்.

மூன்றாம் எண்ணில் (03,12,21,30ஆந் திகதிகள்) பிறந்தவர்கள் ஓரளவு அல்லது உயர் கல்வி கற்ற புத்திசாலிகளாக இருப்பார்கள். அவர்களுக்குச் சுக்கிர திசையும், குரு பகவானும் பக்க பலமாக இருந்தால் உயர் பதவியிலும் இருப்பார்கள். சூரியன், சந்திரன் ஆகியன ஆட்சி அல்லது நட்பாக இருந்தால் வெள்ளையும் கொள்ளை அழகும் கொண்டவர்களாக இருப்பார்கள். அத்தோடு பெயர் எண்ணும், கூட்டெண்ணும் சிறப்பாக அமைந்து விட்டால் அவர்களின் தனிப்பட்ட வாழ்க்கை உயர்ந்த நிலையை எட்டி இருக்கும். தமக்கென ஒரு கோட்டை கட்டி அதற்குள் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். சில வேளைகளில் எதையும் மறுதலித்து, ஏடுத்தெறிந்து பேசுவார்கள். அவர்கள் ஓரளவு நீதி. நேர்மை, நியாயம் ஆகியவற்றையும் வாழ்க்கையில் கடைப்பிடிப்பார்கள். இத்தகையவர்களுக்குப் பொருத்தமான எண்ணில் அமைந்த வாழ்க்கைத் துணை அமையவில்லையாயின் எல்லாமே சுக்கு நூறாகிவிடும். தோல்விகளைச் சமாளித்துப் போகும் சக்தி குறைவாக இவர்களுக்கு இரப்பதனால் விரைவில் நொடிந்து விடுவார்கள். பல சாத்திரிமாரும் ஐயர்மாரும் திருமணப் பொருத்தம் பார்த்துக் கொடுக்கும் போது பிறந்த திகதிக்குரிய சக்தியைப் புரிந்து கொள்ளாமல் ஜாதகக் குறிப்பினைக் கொண்டு பொருத்தத்தினைப் பார்த்துக் கொடுத்து வடுவார்கள். இவர்களும் அவர்கள்மீது கொண்ட அதீத நம்பிக்கையில் சென்று திருமணத்தையும் நடத்தி விடுவார்கள். அதன் பின்னர்தானே பிரச்சினை ஆரம்பமாகும். முடிந்தவரை ஒரே பிறப்பெண் கொண்டவர்கள் திருமண பந்தத்தில் இணையாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு இணைவதாயின் இருவருக்குமிடையில் வயது வித்தியாசம் ஐந்துக்கு மேல் இருத்தல் வேண்டும்.

திருமண பந்தத்தில் இணைந்து கொண்டால் இறக்கும்வரை இணைந்துதான் வாழ்ந்துதான் ஆக வேண்டும். திருமணம் என்பது ஆண், பெண் இருவருக்கும் இடையிலான சட்டரீதியான ஒப்பந்தம். இது ஒருவருக்குரிய சுதந்திரம், உரிமை, தனித்துவம் என்பவற்றைப் பறித்து அடிமைப்படுத்துவதற்கான ஒப்பந்தமல்ல. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் புரிந்துணர்வுடன் ஒழிவு மறைவின்றி வாழ்வதற்கான ஒப்பந்தம். அதைவிடுத்து எங்கும், எதிலும், எப்போதும் தலையிடு செய்யலாம் என நினைத்துச் செயற்படும் போதுதான் முரண்பாடுகள் பெருகி, திருமண வாழ்க்கை தோல்வியடைகின்றது.

இயற்கை என்றும் எப்போதும் ஒழுங்கமைக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இயற்கையும் ஒவ்வொரு உயிரினங்களும் இவ்வாறு இயங்கும்போது ஆறறிவு கொண்ட மனிதன் மாத்திரம் பல நேரங்களில் பல செயல்களில் திட்டமின்றிச் செயற்பட்டுப் பல தோல்விகளைத் தழுவிக் கொண்டிருக்கிறான். எத்தகைய செயலிலும் ஈடுபடு முன்னர் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் செயற்பட்டால் வாழ்க்கையில் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் சவால்களில் இருந்து விடுபட்டுச் சந்தோசமாக வாழலாம்.

*யாகவராயினும் நாகாக்க*
*காவாக்கால் சோகாப்பர்*
*சொல் இழுக்குப் பட்டு - திருக்குறள்.*

**நாகாக்க தொடரும்....**

# காத்தான்குடி கோட்ட கல்வி பிரச்சினையை தீர்த்த செந்தில் தொண்டமான், ஹிஸ்புல்லா!

## பரிசீலிப்பதாக உறுதியளித்தார் ஆளுநர் செந்தில் தொண்டமான்

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை முன்னாள் அமைச்சரும், ஆளுநருமான ஹிஸ்புல்லா, திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்று மரியாதை நிமித்தமாக சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

காத்தான்குடி கோட்ட கல்வி அலுவலகர் பதவி வெற்றிடம் ஏற்ப்பட்டிருந்த நிலையில், அந்த பதவிக்கு இலங்கை கல்வி சேவை தரம் 3 (குஃஉஅகு எகீஅஈஉ 3) தகுதியுடையவர்கள் இல்லாமையால், தற்காலிக அதிகாரியாக இலங்கை அதிபர் சேவையின் தரம் 1 (குஃகது எகீஅஈஉ 1) தகுதியை கொண்ட ஷு.ஷு.கலாவுதீன் நியமிக்கப்பட்டிருந்தார்.

இலங்கை கல்வி சேவை தரம் 3 (குஃஉஅகு எகீஅஈஉ 3) படிப்பை நிறைவு செய்திருந்த அ.எ.மொஹமட் ஹக்கீமுக்கு கோட்ட கல்வி அலுவலகர் நியமனம் வழங்கப்பட்டு,தற்காலிக அதிகாரியாக நியமிக்கப்பட்ட ஷு.ஷு.கலாவுதீனுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

இந்நிலையில் ஷு.ஷு.கலாவுதீனுக்கு



58 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதால் இவரின் வயதை அடிப்படையாக கொண்டும், மனிதாபிமான ரீதியிலும் அருகில் உள்ள ஒரு பாடசாலையில் நியமனம் வழங்க வேண்டுமென ஹிஸ்புல்லா, ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தார்.

கோரிக்கையை ஏற்று, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திஸாநாயக்கவிடம் இவ்விடயம் தொடர்பாக ஆராய்ந்து, கலாவுதினை அருகில் உள்ள பாடசாலைக்கு மாற்றுவதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு பணிப்புரை விடுத்ததுடன், கல்வி அமைச்சின் சட்ட திட்டங்களுக்கு அமைவாக இடமாற்றத்திற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஆளுநர் ஹிஸ்புல்லாவிடம் உறுதியளித்தார்.

நசீர் ஹகமட் ஒரு அமைச்சரவை அமைச்சராக இருந்தும் அவரால் செய்ய முடியாத விடயத்தை , எவ்வித அரச பதவியுமின்றி ஹிஸ்புல்லா நாகரீகமான முறையில் செய்து முடித்துள்ளமை வரவேற்கதக்கதென பல அமைப்புகள் தெரிவித்துள்ளன.

நாகரீகமான முறையிலும் மனிதாபிமான முறையிலும் கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டால் சட்டத்திட்டங்களுக்கு அமைய அவர் உரிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்வார் என்றும், அரட்டல் மிரட்டல்களுக்கு அவர் ஒரு போதும் அடிப்பணிய மாட்டார் என்பதற்கு இந்த செயற்பாடும், அவருடைய கடந்தகால அரசியல் செயல்பாடுகள் எடுத்துக்காட்டு எனவும் பல அமைப்புகள் கருத்துக்கள் வெளியிட்டுள்ளன.









கொழும்பு புறக்கோட்டை இந்து இளைஞர் நற்பணி மன்றத்தினால் அண்மையில் ராகலையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் வாழும் பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான புத்தகப்பை அப்பியாஷ கொப்பிகள் பாதணிகள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பன தலைவர் சுரேஷ் மற்றும் நீர்வாக குழுவினரால் வழங்கி வைக்கப்பட்டது

# மாபெரும் விழாவாக இடம்பெற்ற அகில இலங்கை தமிழ் மொழித்தினம்









**(ம.கிரிசாந்)**

அக்கரைப்பற்று கமு/திகோ/ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி தேசிய பாடசாலையில் 2023 ஆம் ஆண்டுக்கான திருக்கோவில் கல்வி வலய, அகில இலங்கை தமிழ் மொழித்தினம் திருக்கோவில் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் 22/07/2023 இன்றைய தினம் சிறப்பாக திருக்கோவில் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ஓ. கமலமோகனதாசன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது.

இன் நிகழ்விற்கு பிரதம அதிதியாக திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. உதயகுமார் அவர்களும், ஆலையடி வேம்பு பிரதேச செயலாளர் திரு.பபாகரன், வைத்தியர் திருமதி. குணாலினி ஆகியோர் பிரதம ஆதிதியாக கலந்து சிறப்பித்தனர்.

இப் போட்டி நிகழ்ச்சிகளில் பங்குகொள்வதற்காக நாற்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இருந்து மாணவ, மாணவிகள் பங்குபற்றி அவர்களின் திறமைகளை வெளிக்காட்டிருந்தனர்.

மேலும் இன் நிகழ்வுகளுக்கு வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், கல்விமான்கள் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்கு புதிய வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனம்





மட்டக்களப்பு மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளராக யோகேந்திரா ஜெயச்சந்திரன் வெள்ளிக்கிழமை (21) நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கான நியமன கடிதத்தை கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஜி.திஸநாயக்க மட்டக்களப்பில் வைத்து வழங்கி வைத்தார். இதன்போது கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், மட்டக்களப்பு மாவட்ட கல்வி வலயங்களின் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

நியமனத்தினைப் பெற்றுக் கொண்ட புதிய வலயக்கல்விப் பணிப்பாளரிடம், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் வைத்து, மாகாண கல்விப் பணிப்பாளரும் முன்னாள் மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப் பணிப்பாளருமான செல்வி அகிலா கனகசூரியம் உத்தியோகப்பூர்வமாக பொறுப்புக்களைக் கையளித்தார்.

மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய செல்வி அகிலா கனகசூரியம் மாகாணக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டதையடுத்து மட்டக்களப்பு மேற்கு வலயக்கல்வி பணிப்பாளருக்கான வெற்றிடம் நிலவிய நிலையில் இந்நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த வலயக்கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்வியை திருக்கோவில் மெதடிஸ்த மிசன் தமிழ் மகா வித்தியாலத்திலும் இடைநிலைக்கல்வியை தம்பிலுவில் தேசிய கல்லூரியிலும் கற்று அதன் பின்னர் உயர் கல்வியை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் வணிகப் பிரிவில் சித்தியடைந்து கிழக்கு பல்கலைக் கழகத்தில் வணிகத்துறையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார்.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சிந்தியடைந்த இவர், அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தில் திட்டமிடல் பிரதி கல்விப் பணிப்பாளராக முதல் நியமனம் பெற்றார். பின்னர் கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்திலும், திருக்கோவில் வலயக் கல்வி அலுவலகத்தில் பிரதி கல்விப் பணிப்பாளராகவும் பின்னர் அவ்வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் பிரதிக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றி வந்த நிலையில், வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனத்தினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சித்தத்தில் நிறைந்த ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 72 வது குரு பூசை நாளை





சித்தருள் சித்தர் சித்தானைக்குட்டி சுவாமிகளது 72 ஆவது குருபூசை விழா நாளை 26ஆம் திகதி புதன்கிழமை சிறப்பாக நடைபெறுகிறது.

சுவாமி மகாசமாதி அடைந்த காரைதீவில் அமைந்துள்ள சித்தானைக்குட்டி மடாலயத்தில் நாளை 72 ஆவது குருபூஜை வழமை போல் சிறப்பாக நடைபெறுகிறது.

''சித்தத்தில் உறைந்தவராம் சித்தானைக் குட்டி எங்கள் சித்தமெல்லாம் நிறைந்தவராம் சித்தானைக்குட்டி.''

இவ்வாறு பக்தர்களால் அன்போடு பக்தியோடு நம்பிக்கையோடு பாடித்துதிக்கப் படும் ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமிகளுக்கு நாளை 72 வது குருபூஜை.

சுவாமி கிழக்கு மாகாணத்தில் உள்ள காரைதீவில் 1951 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் 21 ஆம் நாள் சுவாதி நட்சத்திர தினத்தன்று ஜீவ சமாதியானார்.

பாரத நாட்டின் இராமநாதபுரத்து சிற்றரசன் மகனாக அவதரித்த இம்மாபெரும் சித்தர் ஆடிய சித்துக்கள் எண்ணிலடங்கா.

கதிர்காம திருவிழா காட்சியை தனது உள்ளங்கையில் காண்பித்த இம்மகான் கதிர்காம காட்டில் வழிதப்பியவர்களுக்கு வழி காட்டியுள்ளார். மேலும் சாண்டோ சங்கரதாசை பெரும் இரும்பரசனாக புகழ் பூக்கச் செய்தவரும் சித்தானைக்குட்டிசுவாமிகளே!

இவர் ஆடிய சித்துக்களில் குறிப்பிடத்தக்கவை: ஊமையை பேசவைத்தார். மாண்ட பெண்ணை உயிர்ப்பித்தார். கடலில் அகப்பட்டவனை மீட்டார் மாட்டிறைச்சி மல்லிகைப் பூஆக்கினார். கடலின் மேலால் நடந்தார்.ஒரு முறை கல்முனை சந்தியில் நின்று கதிர்காமத்தில் தீப்பிடித்த திரை சேலையை அணைத்தார். அறுத்த மீனை பலா சுளையாக மாற்றினார். இவர் ஆடிய சித்துக்கள் இன்னும் பல பல...

காரைதீவு 2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலையால் தாக்கப்பட்ட போது

சித்தானைக்ககுட்டி சமாதி கோயில் மட்டும் தப்பியது மிக மிக அற்புதமானதொன்றாகும். ஜீவ சமாதி அடைந்த இந்த மகான் இன்றும் அவரை சரணடைந்தவர்களை எத்தனையோ ஆபத்தானசூழ்நிலைகளில் இருந்து காத்து வருகின்றார் என பக்தர்களிடம் இருந்து பல்வேறு அனுபவங்களை கேள்விப்படுகின்றோம்.

2011ம் ஆண்டு சுவாமியின் 60 வது குருபூசை தினத்தில் ஐம்பொன் சிலை பிரம்மரிஷி மலை அன்னை சித்தர் இராஜ்குமார் சுவாமி அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது

என்பது குறிப்பிடத்தக்கது.

''ஆதியந்த மொன்றுமிலா ஐயன் வாழ்க
அருட் சக்தி வாழ்க ஜங்கரனும் வாழ்க
சோதி வடிவேல் வாழ்க தூயோர் வாழ்க
தொண்டர்ரெலாம் துயரின்றி வாழ்க வாழ்க
பூதலத்தில் மக்களெல்லாம் ஓர்தாய் பெற்ற
புத்திரர் போல் ஒருமித்து பொழிந்து வாழ்க
சாதிமத பேதமில்லா சன்மார்க்கத்தை தந்த
சித்தர் சித்தானைக்குட்டி வாழ்க வாழ்கவே.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**




தா என்றால் இந்தா என வழங்கும் தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய தீர்த்தோற்சவம் எதிர்வரும் 02.08.2023 ம் திகதி அதிகாலை 6 மணிக்கு நடைபெற உள்ளது.

**அனைத்து முருக பக்தர்களையும் இறை அன்புடன் அழைக்கின்றோம்....**

**விளம்பர அனுசரணை:மு. அருட்செல்வம் (முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்)**


"ஓம் ஸ்ரீ சிவமுத்து மாரியம்பாள் துணை"
மட்டக்களப்பு - வந்தாறுமூலை
பேரருள் மிகு அன்னை ஸ்ரீ சிவமுத்து மாரியம்மன் ஆலய
வருடாந்த திருக்குளிர்த்தியும் தீ மிதிப்புப் பள்ளயமும் - 2023
ஆரம்பம்
25.07.2023
செவ்வாய்க்கிழமை
வேதம் புகழ் மாதங்கியாம் எங்கள் முத்துமாரி
வேப்பிலை கரகம் கொண்ட எங்கள் முத்துமாரி
தாங்கும் சிங்க வாகனத்தால் எங்கள் முத்துமாரி
மாரியம்மன் தியானக்கும்மி
நிறைவு
31.07.2023
திங்கட்கிழமை
அன்னை அடியார்களே!
பாற்குடப் பவனி 28.07.2023
ஆலய திருச்சடங்கு நிகழ்வுகள்
25.07.2023 செவ்வாய்க்கிழமை 01ம் நாள் வந்தாறுமூலை ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து மடை எடுத்தலும், திருக்கதவு திறத்தல் வைபவமும் இடம்பெறும். உபயகாரர் : 1ம் பாகை
26.07.2023 புதன்கிழமை 2ம் நாள் விஷேட அபிஷேக பூசையும் வேப்பையடிப் பிள்ளையார் (V.C வீதி) ஆலயத்தில் இருந்து பட்டெடுத்தல் வைபவமும் நடைபெறும். உபயகாரர் : 2ம் பாகை
27.07.2023 வியாழக்கிழமை 3ம் நாள் விஷேட அபிஷேக பூசை இடம்பெறும். உபயகாரர் : 2ம் பாகை
28.07.2023 வெள்ளிக்கிழமை 4ம் நாள் காலை 8.00 மணிக்கு மருங்கையடிப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாற்குடப்பவனியும் விஷேட பால் அபிஷேகப் பூசையும் இடம்பெறும். உபயகாரர் : 3ம் பாகை
மாலை வீரகம்பம் வெட்டும் சடங்கும் விஷேட பூசையும் இடம்பெறும். உபயகாரர் : 4ம் பாகை
29.07.2023 சனிக்கிழமை 5ம் நாள் விஷேட அபிஷேக பூசையும், மாலை அம்பாளின் ஊர்வலமும் இடம்பெறும். உபயகாரர் : 5ம் பாகை
30.07.2023 ஞாயிற்றுக்கிழமை 6ம் நாள் அம்பாளின் விநாயகர்பானை எழுந்தருளப்பண்ணுதலும், விஷேட அபிஷேக பூசையும் இடம்பெறும்.
31.07.2023 திங்கட்கிழமை 7ம் நாள் அதிகாலை 3.00 மணிக்கு பள்ளயச் சடங்கும், தொடர்ந்து தீ மிதிப்பு, காலை திருக்குளிர்த்தி இடம்பெற்று களுவன்கேணி இந்து சமுத்திரத்தில் கும்பம்சொரிதல். ஆலயத்தில் அன்னதானம் வழங்கப்பட்டு இனிதே நிறைவுபெறும்.
குறிப்பு : 31.07.2023 அம்பாளுக்கு நேர்த்திக்காக வரும் ஆடு, மாடு, கோழி என்பன பிற்பகல் 3.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும்.
தீ மிதிப்பு 31.07.2023 திங்கட்கிழமை அதிகாலை 5.00
பிரசுர அன்பளிப்பு :
சுந்தரலிங்கம் மேகவர்ணன்
களுவங்கேணி வீதி,வந்தாறுமூலை.
அனைவரும் வருக!
அம்மன் நல்லாசி பெறுக!
சுபம்
இறைபணியில்
ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலய
பரிபாலன சபை
துர்க்கா அச்சகம், கொக்குவில், மட்டக்களப்பு, 065 2053060